உள்ளதா என்பதை அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி, ஸ்தல அதிகாரிகளை அந்த இடத்தைப் பார்வையிடச் செய்து, அந்தப் பகுதியில் ஒரு முழுமையான அறிக்கையைப் பெற்று, தமிழ்நாடு மின்சார வாரியம் மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 306, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

306—

முத்துராமன்பட்டியில் மேம்பாலம் கட்டுதல்

***35631**—*திரு. சஞ்சய் ராமசாமி :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர்-முத்துராமன்பட்டி இருப்புப் பாதை சந்திக் கடவில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலம் கட்டும் பணி தென்னக இரயில்வேயில் 1995-96 ஆம் ஆண்டு மூலத் திட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பாலம் அமைக்கும் சாலையில் நேர்பாடு குறித்து நெடுஞ்சாலைத் துறை மற்றும் இரயில்வே துறை பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்குப் பின், முறைப்படி பணிகள் துவக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிவகாசிக்கு வருகை தரும்போது அந்தப் பகுதியிலுள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ராமசாமி முதற்கொண்டு, காமராசர் மாவட்டத்தில் உள்ள எல்லா எம்.எல்.ஏ.-க்களும், பொது மக்களும் அந்தப் பகுதியில் காமராசர்

1995 ஏப்ரல் 17]

மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மாவட்டத்தினுடைய அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்றன, பெண்கள் பிரசவத்திற்குப் போவதற்கு சிரமமாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். பாலம் அமைக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி, 1995-96 ஆம் ஆண்டு அங்கே பாலம் கட்டுவதற்கு வேண்டிய ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு, அந்த ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன், அந்த எஸ்டிமேட்டைப் போட்டு, ரூபாயைக் கொடுத்து, அதைக் கட்டுவதற்கு காலதாமதம் ஆனாலும், ரூபாய் நிச்சயம் வரும் என்று உறுதியாகத் தெரிந்தாலும், தமிழ்நாடு அரசே தன்னுடைய நிதியை வைத்துக் கொண்டு, உலக வங்கியினுடைய உதவியோடு அந்தப் பாலம் கட்டுகிற வேலையை துரிதப்படுத்தி கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். **கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பாலமானது விருதுநகர்-அருப்புக்கோட்டை சாலையில் 0.6-ல் ரெயில்வே இருப்புப் பாதை சந்திக் கடவில் பாலம் கட்டுவதைப் பற்றியதாகும். பொதுவாக ரயில்வே மேம்பாலங்களைக் கட்டுகின்றபோது, மாநில அரசு 50 சதவீதமும், மத்திய அரசு 50 சதவீதமும் முதலீடு செய்து, அந்தப் பால வேலைகள் முடிக்கப்படுகின்றன. இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில், அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையைக் கருதித்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் ரயில்வே துறையோடு, பேசி, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த பொறியாளர்களும், ரயில்வே துறையைச் சேர்ந்த பொறியாளர்களும் சேர்ந்து இன்றைக்கு ஆய்வு செய்து, எந்த அளவிலே கட்டலாம் என்பதைப் பற்றி இன்றைக்குக் கணக்கெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஏறத்தாழ 7 கோடி ரூபாய் தேவைப்படுகிறது இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு. அதிலே பாதித் தொகை மாநில அரசின் சார்பிலே கொடுக்கப்படவேண்டும். பாதித் தொகை மத்திய அரசின் சார்பிலே ரயில்வே துறையின் மூலம் வரவேண்டும். ஆகவே, இரண்டு பேரும் சேர்ந்து இந்தப் பாலத்தைக் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பாலத்திற்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. 1995-96 ஆம் ஆண்டுக்கான திட்டத்திலே அனுமதி

அளிக்கப்பட்டு இருக்கிறது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமக்கு சரியான எஸ்டிமேட் அதாவது மதிப்பீடுகள் தயார் செய்து, ரயில்வே துறையோடு கலந்து பேசி, - அவர்களும் தொகையை ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நாமும் பணத்தை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறோம். ஆகவே நிதித்துறையோடு கலந்து பேசி, ரயில்வே துறையிடம் கலந்து பேசி - 7 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட இருக்கின்ற இந்தப் பாலத்தின் பணிகளை விரைவிலே துவக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 307. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

307—

கோயம்புத்தூர் கூடை முனைவோர்களுக்குப் புதிய வீடுகள் கட்டுதல்

***39974-** திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கோயம்புத்தூர் அருணாசலம் ரோடு, மெக்ரிக்கன் ரோடு, தடாகம் ரோடு பகுதிகளில் உள்ள கூடை முனைவோர் குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய மாடி வீடுகள் கட்டித்தரப்படுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கோவையில் கூடை முடையும் தொழில் செய்வோர்கள் சுதந்திரம் பெற்றதிலிருந்து இருப்பிடம் இல்லாமல், தெருவோரங்களில் குடிசையிட்டு வசித்து வந்த அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியோடு இப்போது அருணாசலம் ரோடு பகுதியில் 115 வீடுகளை 70 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. அதேபோல் மெக்ரிக்கன் பகுதியிலும் வீடுகளைக் கட்டவேண்டும் என்ற கோரிக்கைக்கு,